

கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (17.3.2026) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், தமிழ்நாடு – புதுச்சேரி சட்டப்பேரவை பொதுத்தேர்தல் 2026 நடைபெறவுள்ளதையொட்டி, கழகத்தின் சார்பில் வேட்பாளர்களாக போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்துள்ளவர்களுடன் நேர்காணல் நடத்தினார். இந்நிகழ்வின்போது, கழகப் பொதுச் செயலாளர், நீர்வளம் மற்றும் சட்டத் துறை அமைச்சர் துரைமுருகன், கழகப் பொருளாளர், நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கொள்கைப் பரப்புச் செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெகத்ரட்சகன் ஆகியோர் உடனிருந்தனர்.

# வேலூர் வடக்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. அறிவிப்பு!

வேலூர், மார்ச் 18-

வேலூர் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



வேலூர் வடக்கு மாவட்ட தி.மு.க. அவசரச் செயற்குழுக் கூட்டம் இன்று (18.03.2026 புதன்கிழமை) பகல் 10.30 மணியளவில் மாவட்ட பொருளாளர் சி.நரசிம்மன் தலைமையில் வேலூர் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் டி.எம்.கதிர்ஆனந்த் அவர்களின் காட்பாடி இல்லத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் கீழே குறிப்பிட்டுள்ள பொருள் குறித்து விவாதிக்கப்பட உள்ளது. எனவே, வேலூர் வடக்கு மாவட்ட தி.மு.க. விற்குட்பட்ட சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், தொகுதி பொறுப்பாளர்கள், ஒன்றிய, பகுதி, பேரூர் கழகச் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில, மாவட்ட, மாநகர நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பொருள்:

கழகத்தலைவர், முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 16.03.2026 அன்று நடைபெற்ற மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் குறித்து.

சட்டமன்றத் தேர்தலுக்கான வாக்குச் சேகரித்தல் குறித்து.

கழக ஆக்கப்பணிகள்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## ரயில்வே: சொற்ப நிதி ஒதுக்கீடு

# 4.5 லட்சம் கோடி ரூபாய் கடன் மோசமான உள்கட்டமைப்பு!

## மக்களவையில் ஒன்றிய அரசின் மீது கே.இ.பிரகாஷ் குற்றச்சாட்டு!

புதுடெல்லி, மார்ச் 18 -

மக்களவையில் நடைபெற்ற ரயில்வே மானியக்கோரிக்கை மீதான விவாதத்தில் பங்கேற்று உரையாற்றிய ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், ரயில்வே துறையில் ஒன்றிய அரசு நிகழ்த்தி வரும் நிர்வாகச் சீர்கேடுகளையும், மாற்றாந்தாய் மனப்பான்மையோடு தமிழ்நாடு புறக்கணிக்கப்படுவதையும் கடுமையாக சாடிப் பேசினார். தமிழ்நாடு முதலமைச்சரின் தலைமையில் தொடர் போராட்டம் நடத்தி, தமிழ்நாடு தனது உரிமைகளை மீட்கும் என்று அவர் சூளுரைத்தார்.



ஒன்றிய நிதியமைச்சரின் பட்ஜெட் உரையில் 'ரயில்வே' என்ற சொல்லே இடம்பெறாதது இந்த அரசின் அலட்சியத்தை உணர்த்தும் ஆதாரம் என்று குறிப்பிட்ட அவர், ரயில்வே உள்கட்டமைப்புச் செலவுகள் 66% உயர்ந்துள்ள நிலையில், நிதி ஒதுக்கீடு வெறும் 8.5% மட்டுமே அதிகரிக்கப்பட்டுள்ளது என்று குற்றம் சாட்டினார். மேலும், ரயில்வே துறையை 4.5 லட்சம் கோடி ரூபாய் கடனில் தத்தளிக்க விட்டுவிட்டு, ரயில் நிலையங்களில் சாதனைப் பதாகைகளை வைப்பது அர்த்தமே இல்லாதது என்று அவர் ஒன்றிய அரசை சாடினார்.

சாமானிய மக்கள் பயன்படுத்தும் ஸ்லீப்பர் மற்றும் இரண்டாம் வகுப்பு பெட்டிகளில் இடவசதி வெறும் 1.2% மட்டுமே உயர்ந்துள்ளதால் மக்கள் கழிவறை வாசலில் அமர்ந்து பயணிக்கும் அவலநிலை தொடர்வதாக அவர் குற்றம் சாட்டினார். 'டிஜிட்டல் இந்தியா' என்று நாடகமாடும் ஒன்றிய அரசு, காகிதப்பதிவேட்டில் புகார் எழுதும் வழக்கம் உட்பட ரயில்வேயை இன்னும் பழங்காலத்திலேயே வைத்திருப்பதாகவும், உணவின் தரம் குறித்த புகார்களை தொடர்ச்சியாக தட்டிக்கழிப்பதாகவும் அவர் காட்டமாக விமர்சித்தார்.

ஈரோடு தொகுதி மற்றும் கொங்கு மண்டலத்தின் நீண்டகால ரயில்வே கோரிக்கைகளை முன்வைத்து பேசிய திரு. கே.இ.பிரகாஷ் எம்.பி அவர்கள், குமாரபாளையம் வழியாக ஈரோடு நாமக்கல் இடையே நேரடி ரயில் பாதை அமைக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். அதேபோல், கோயம்புத்தூர் ஈரோடு இடையிலான MEMU ரயிலை கரூர் மற்றும் நாமக்கல் வழியாக சேலம் வரை நீட்டிக்க வேண்டும் என்றும், ஈரோடு -திருப்பூர் வழித்தடத்தில் கூடுதல் பயணிகள் ரயில்களை இயக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

தமிழ்க்கடவுள் முருகனின் மீது திடீர் பாசம் வந்து வேல் யாத்திரை உள்ளிட்ட விளம்பரங்களை காட்டும் ஒன்றிய அரசு, ஈரோடு - பழனி நேரடி ரயில் சேவையைத் தொடங்காதது பக்தர்களையும் பொதுமக்களையும் ஏமாற்றும் செயல் என்று அவர் சாடினார். ரயில்வே துறையும் தேசிய நெடுஞ்சாலைத் துறையும் ஒருங்கிணைவு இல்லாமல் திட்டங்களை முடக்குவதாக குறிப்பிட்ட அவர், வெள்ளக்கோயில் சங்ககிரி Road Over Bridge உள்ளிட்ட நிலுவையில் உள்ள பணிகளுக்கு உடனடி அனுமதி வழங்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகள் மீது தாமதமில்லாமல் உடனடியாக நடவடிக்கை எடுக்கும் வகையில் 'எம்.பி-க்கள் கோரிக்கை தீர்வுக் குழு' அமைக்க வேண்டும் என்றும், இந்தியாவின் இன்றியமையாத ரயில்வே துறையில், அலட்சியம், நிர்வாகக் குளறுபடிகள் மற்றும் மாநிலங்கள் மீது பாகுபாட்டுக்கு இடம் கொடுக்காமல் ஒன்றிய அரசு செயல்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

வருகிற 2026 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் நடைபெறும் சட்டமன்ற தேர்தலில் மீண்டும் எங்களுடைய தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் மு.க.ஸ்டாலின் அவர்கள் வென்று ஒன்றிய அரசிடம் போராடி தமிழ்நாட்டின் உரிமையை மீட்போம் காப்போம். வாழ்க தமிழ்! வளர்க தமிழ்நாடு! என்று கூறி, அவர் தனது உரையை நிறைவு செய்தார்.



தூத்துக்குடி மாவட்டம் புதூர் ஊராட்சி ஒன்றியம் என்.வேடப்பட்டி கிராமத்தில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.12 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள நியாய விலைக் கடையினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி. மார்க்கண்டேயன் திறந்து வைத்தார். நிகழ்வில் புதூர் ஒன்றியச் செயலாளர்கள் ராதாகிருஷ்ணன், மும்மூர்த்தி, செல்வராஜ், கிளைச் செயலாளர் சத்தியமூர்த்தி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## பொய்யான குற்றச்சாட்டுகளை முன்வைத்து என்.டி.ஏ. போராட்டம்!

# பா.ஜ.க. ஆளும் குஜராத்தில் இருந்துதான் நாடு முழுவதும் போதைப்பொருள் கடத்தல்!

## அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!

சென்னை, மார்ச் 18-

சென்னை அண்ணா அறிவாலயத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் எஸ்.ரகுபதி கூறுகையில் பா.ஜ.க., ஆளும் குஜராத் மாநிலம்தான் போதைப்பொருட்கள் கடத்தலுக்கு மையமாக உள்ளது என்றும் குஜராத்திலிருந்துதான் பல மாநிலங்களுக்கு போதைப் பொருட்கள் கடத்தப்படுவதாகவும் குற்றம்சாட்டினார்.



மேலும் அவர் முந்தைய அதிமுக ஆட்சியில்தான் தமிழ்நாட்டில் போதைப்பொருட்களின் நடமாட்டம் அதிகமாக இருந்தது என்றும், போதைப்பொருள் சப்ளையரையே தன்னுடன் எடப்பாடி பழனிசாமி வைத்திருக்கிறார் என்றும் சாடினார். தமிழ்நாடு போதையில்லா மாநிலமாகவும், பெண்களுக்கு பாதுகாப்பான மாநிலமாகவும் திகழ்வதாக தெரிவித்த அமைச்சர் ரகுபதி, தி.மு.க. ஆட்சியில் மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு சிறப்பாக உள்ளது என்று கூறினார்.

இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

பா.ஜ.க., ஆளும் குஜராத் மாநிலம்தான், போதைப்பொருட்கள் கடத்தலுக்கு மையமாக உள்ளது குஜராத்திலிருந்துதான் பல மாநிலங்களுக்கு போதைப்பொருட்களை கடத்துகிறார்கள் தமிழ்நாட்டில் எங்கேயுமே போதைப் பொருள் உற்பத்தி கிடையாது. தி.மு.க. ஆட்சியில் தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு சிறப்பாக உள்ளது அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் குட்கா வழக்கில் அமைச்சர் மீதே வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

எடப்பாடி பழனிசாமியின் பொய்களை மக்கள் நம்பத் தயாராக இல்லை தமிழ்நாட்டுப் பெண்கள், தி.மு.க.வின் பக்கம் இருப்பதால், எடப்பாடி பழனிசாமிக்கு வயிற்றெரிச்சல் போதைப்பொருள் சப்ளை செய்தவரையே தனது கட்சியில் வைத்திருக்கிறார் எடப்பாடி பழனிசாமி -

குஜராத்தில் உள்ள அதானிக்கு சொந்தமான துறைமுகம் வழியாகத்தான் இந்தியாவிற்குள் போதைப் பொருள் கடத்தப்படுகிறது

தி.மு.க. ஆட்சியில் தமிழ்நாட்டுப் பெண்கள்பாதுகாப்பாக உள்ளனர். நாட்டிலேயே, பெண்களுக்கு பாதுகாப்பான மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது நடிகர் ரஜினிகாந்தை மிரட்டியதாக அப்பட்டமான பொய் குற்றச்சாட்டு.

நடிகர் ரஜினிகாந்தை மிரட்டியதாக தி.மு.க. மீது அப்பட்டமான பொய் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. தி.மு.க.வுக்கு நெருங்கிய நண்பராக இருந்து வருபவர் ரஜினிகாந்த், அவரை யாரும் மிரட்டவும் முடியாது, எந்த மிரட்டலுக்கும் அவர் அஞ்ச மாட்டார்.

இவ்வாறு அமைச்சர் ரகுபதி தெரிவித்தார்.

## தமிழ்நாடு – புதுச்சேரி சட்டப்பேரவை பொதுத்தேர்தல் – 2026

# தி.மு.க. வேட்பாளர்கள் நேர்காணல்!

## தலைமைக் கழக அறிவிப்பு!

தமிழ்நாடு – புதுச்சேரி சட்டப்பேரவை பொதுத் தேர்தலுக்கு போட்டியிட விரும்பி தலைமைக் கழகத்திற்கு விண்ணப்பம் செலுத்தியவர்களை கழகத் தலைவர் அவர்கள் 17–03–2026 முதல் 22–03–2026ஆம் தேதி வரை, பின்வரும் மாவட்ட வாரியாக சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் நேர்காணல் வாயிலாக சந்தித்து தொகுதி நிலவரம் வெற்றி வாய்ப்புகள் குறித்து ஆராய்ந்து அறிந்திட இருக்கிறார்கள்.

குறிப்பிட்டுள்ள தேதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டத்தைச் சேர்ந்த மாவட்டக் கழகச் செயலாளர் மட்டும் வரவேண்டும். மாவட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் ஒன்றிய, நகர, பகுதிக் கழகச் செயலாளர்கள் வரவேண்டிய அவசியமில்லை. வேட்பாளர்கள் தங்களுக்கான ஆதரவாளர்களையோ, பரிந்துரையாளர்களையோ அழைத்து வரக்கூடாது என்றும், அவர்களையும் 'அவர்களுக்காக விருப்ப மனு' செலுத்தியோரையும் நேர்காணலுக்கு கண்டிப்பாக அனுமதிக்க இயலாது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

### மாவட்ட வாரியாக நேர்காணல் நடைபெறும் நாள் விவரம்

| நாள் – கிழமை | நேரம் | மாவட்டம் |
|---|---|---|
| மார்ச் 18 புதன் | காலை 9.00 மணி | தூத்துக்குடி தெற்கு, தூத்துக்குடி வடக்கு, திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி மத்திய, திருநெல்வேலி மேற்கு, தென்காசி வடக்கு, தென்காசி தெற்கு, கன்னியாகுமரி கிழக்கு, கன்னியாகுமரி மேற்கு |
| ,, ,, ,, | மாலை 4.00 மணி | மதுரை வடக்கு, மதுரை மாநகர், மதுரை தெற்கு, தேனி வடக்கு, தேனி தெற்கு, விருதுநகர் வடக்கு, விருதுநகர் தெற்கு, இராமநாதபுரம், சிவகங்கை |
| மார்ச் 19 வியாழன் | காலை 9.00 மணி | கரூர், நாமக்கல் கிழக்கு, நாமக்கல் மேற்கு, ஈரோடு வடக்கு, ஈரோடு தெற்கு, ஈரோடு மத்திய, கோவை வடக்கு, கோவை மாநகர், கோவை தெற்கு, திருப்பூர் வடக்கு, திருப்பூர் மத்திய, நீலகிரி |
| ,, ,, ,, | மாலை 4.00 மணி | கிருஷ்ணகிரி கிழக்கு, கிருஷ்ணகிரி மேற்கு, திருப்பூர் கிழக்கு, திருப்பூர் தெற்கு, திண்டுக்கல் கிழக்கு, திண்டுக்கல் மேற்கு |
| மார்ச் 20 வெள்ளி | காலை 9.00 மணி | இராணிப்பேட்டை, வேலூர் வடக்கு, வேலூர் தெற்கு, திருப்பத்தூர், திருவண்ணாமலை வடக்கு, திருவண்ணாமலை தெற்கு, |
| ,, ,, ,, | மாலை 4.00 மணி | தர்மபுரி கிழக்கு, தர்மபுரி மேற்கு, சேலம் மத்திய, சேலம் கிழக்கு, சேலம் மேற்கு, கள்ளக்குறிச்சி வடக்கு, கள்ளக்குறிச்சி தெற்கு. |
| மார்ச் 21 சனி | காலை 9.00 மணி | திருச்சி வடக்கு, திருச்சி மத்திய, திருச்சி தெற்கு, தஞ்சை வடக்கு, தஞ்சை தெற்கு, தஞ்சை மத்திய, பெரம்பலூர், அரியலூர் |
| ,, ,, ,, | மாலை 4.00 மணி | புதுக்கோட்டை வடக்கு, புதுக்கோட்டை தெற்கு, கடலூர் மேற்கு, மயிலாடுதுறை நாகப்பட்டினம், திருவாரூர் |
| மார்ச் 22 ஞாயிறு | காலை 9.00 மணி | கடலூர் கிழக்கு, விழுப்புரம் வடக்கு, விழுப்புரம் மத்திய, விழுப்புரம் தெற்கு, காஞ்சிபுரம் தெற்கு. |
| ,, ,, ,, | மாலை 4.00 மணி | திருவள்ளூர் கிழக்கு, திருவள்ளூர் மத்திய, திருவள்ளூர் மேற்கு, காஞ்சிபுரம் வடக்கு, சென்னை வடக்கு சென்னை வடகிழக்கு, சென்னை தென்மேற்கு, சென்னை தெற்கு, சென்னை மேற்கு, சென்னை கிழக்கு |

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 15-03-2026.

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.